மாண்புமிகு திரு எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி என்றாலும்கூட, வாகனங்கள் நெரிசல் ஏற்படுவதால் விருதுநகரில் லாரி பேட்டை ஒன்றை நகராட்சிமூலம் அமைக்கக் கேட்டார். அங்கே இடம் இருக்கின்றபட்சத்தில், துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, அவசியம் இருப்பின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

மீன்பிடித் துறைமுகம்

***1535—திருமதி பெ. சீத்தாபதி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரக்காணம் பகுதியிலுள்ள கடற்கரையில் புதிய மீன்பிடித் துறைமுகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் பகுதியில் எக்கியார்குப்பம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு மீன் இறங்குதளம் அமைக்கப்பட்டு, மீனவர்களின் பயன்பாட்டில் உள்ளது. மரக்காணம் பகுதி சார்ந்த கிராமங்களில் உள்ள பெரும்பான்மையான மீனவர்கள் கரையேற்றும் நாட்டுப் படகுகளைக் கொண்டுதான் மீன் பிடித்து வருகின்றனர். மேலும், இப்பகுதியில் 14 விசைப் படகுகள் மட்டுமே உள்ளன. எனவே,

மரக்காணம் பகுதியிலுள்ள கடற்கரையில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைத்திடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் கடற்கரைப் பகுதியில் 19 மீனவ கிராமங்கள் உள்ளன. மீன்பிடித் துறைமுகம் அங்கு கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும். காரணம், இங்கு 18 வயது முதல் 60 வயதிற்குட்பட்ட மீனவர்கள் 5,200 பேர், கடலில் சென்று மீன்பிடிக்கும் 60 வயதிற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் 3,000 பேர், மீன் விற்பனை செய்யும் மகளிர் 5,600 என 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை உள்ளது. மீன்பிடிப்பதற்கு IB எனப்படும் பெரிய வகை விசைப் படகுகள் 50, Ringroll எனப்படும் Khanna வகை விசைப் படகுகள் 70, Fibre எனப்படும் கட்டுமர விசைப் படகுகள் 1,100, துடுப்பால் பயன்படுத்தும் கட்டுமரங்கள் 1,000 உள்ளன. இங்கு மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்கள் தினம்தினம் ராட்சஸ அலைகளோடு போராடும் நிலை உள்ளது. அவர்களது உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. ஒரு நாளைக்கு அவர்கள் பிடிக்கிற மீன்களின் அளவு 50 டன்கள் ஆகும். மீனவர்களின் பாதுகாப்பிற்கும், அவர்கள் பிடித்துவரும் மீன்களின் பாதுகாப்பிற்கும் மீன்பிடி துறைமுகம் அவசியம் என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில புள்ளிவிவரங்களை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கின்றார்கள். அவர் கூறியதுபோல், இங்கு 50 டன் மீன்கள் பிடிப்பது இல்லை, 177 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. ஆனால், பிடிக்கப்படுகின்ற மீன்களை அன்றைக்கே விற்றுவிடுகின்ற சூழ்நிலையில், அந்த மீன்களைப் பாதுகாப்பதற்கும் cold processing chain என்று சொல்லப்படுகின்ற அந்த chain–ல் இருப்பு

2016 ஆகஸ்ட் 17]

வைப்பதற்கும் வழி இல்லை. நம்முடைய கலங்கரை விளக்கமாக இருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எக்கியார்குப்பத்தில் மீன்பிடி இறங்குதளத்தை அமைப்பதன்மூலம் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்ற உயர்ந்த எண்ணத்தோடுதான் 2012 ஆம் ஆண்டு 5 கோடி ரூபாய் செலவில் மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்கு உத்தரவிட்டு, இப்போது அந்த இடத்தில் இறங்குதளம் அமைக்கப்பட்டு, சிறப்பான முறையிலே மீனவர்களின் பயன்பாட்டிலே அது இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்று மட்டும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும், எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம்தான் தமிழ்நாட்டில் மீனவர்களின் வாழ்வாதாரம் உயரும் என்ற எண்ணத்தினை மனதில்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்கள். குஜராத் என்று பார்த்தால், 657 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். ஆனால், குஜராத்தைக் காட்டிலும் 743 கோடி ரூபாய் அடிப்படை கட்டமைப்பு வசதிக்காக, மீனவர்கள் நல்வாழ்விற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். அந்த மாவட்டத்தினுடைய சட்ட அமைச்சர்கூட மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். எனவே, நம்முடைய மாவட்டத்தில் உள்ள மீன்பிடி கலன்கள், FRB கட்டுமரங்கள், நாட்டுப்புற படகுகள் மற்றும் விசைப் படகுகள் இவற்றினுடைய எண்ணிக்கையையெல்லாம் கருத்தில்கொண்டு, அவசியம் இருப்பின், எதிர்காலத்தில் இதைப்பற்றி யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எக்கியார்குப்பத்தில் உள்ள மீன்பிடி இறங்குதளம் அலை வந்து மோதக்கூடிய இடமாகும். உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பற்ற இடமாகவும் உள்ளது. இறங்குதளத்தை மீனவர்கள்

யாரும் பயன்படுத்துவதும் கிடையாது. எனவே, மீன்பிடி துறைமுகம் அத்தியாவசியம் என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, Landing Center, Fishing Harbour ஆக இருந்தாலும் சரி, Mini Fishing Harbour (சிறிய மீன்பிடித் துறைமுகம்) ஆக இருந்தாலும் சரி, நடுத்தர மீன்பிடித் துறைமுகம், தங்கு தளங்கள் ஆகியவை அமைக்கப்பட வேண்டுமென்றால், நமது அரசுத் துறை மட்டும் தன்னிச்சையாக முடிவெடுத்து அமைக்கப்படுவதில்லை. Central Institute of Coastal Engineering for Fisheries என்ற நிறுவனம் பெங்களூரிலே இருக்கின்றது. அவர்களுடைய கருத்தைப் பெற நிறுவனம் வேண்டும். அதேபோல், The Central Water and Power Research Station, CWPRS பூனாவில் இருக்கின்றது. அவர்களது கருத்தையும் பெற வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, National Institute of Oceanography Technology மற்றும் I.I.T ஆகியவற்றின் கருத்துகளையும் பெற வேண்டும். கடலில் அலைகளின் வேகம், High Tide இருக்கின்றதா அல்லது Low tide இருக்கின்றதா மற்றும் water current, போன்றவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, நம்முடைய மீனவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு ஏற்படுத்தக்கூடிய நிலையில்தான் அங்கு தங்குதளங்கள் அமைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தக் கருத்து உண்மையாக இருக்குமேயானால், அது குறித்து ஓர் ஆய்வு செய்து, மீனவர்களுக்கு முழுமையான பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களது கவனத்திற்கு எடுத்துச் சென்று, அரசு அது குறித்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்கார்ந்து கொண்டே பேசினால் எப்படி? பேசாமல் கையை தூக்குங்கள். நேரம் இருந்தால் வாய்ப்பு தருவேன்.